RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1915

# கீதை காட்டும் அறநெறி பாதை

**லெ. புவனேஸ்வரி [அ, *], தி. பார்த்திபன் [அ]**

[அ] மெய்யியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-613010, தமிழ்நாடு, இந்தியா

# Moral Ideas in Gita

**L. Bhuvaneswari [a, *], T. Parthiban [a]**

[a] Department of Philosophy, Tamil University, Thanjavur–613010, Tamil Nadu, India

* Corresponding Author
bhuvan76eswari@gmail.com

Received: 11-07-2022
Revised: 29-09-2022
Accepted: 12-10-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

When a person's behavior shows high moral standards, it is called virtue. Man's behavior can be determined by the virtue he performs. The Tamil word 'Aram' is called 'Dharma' in vernacular language and as 'Morality' or 'Virtue' in English. A man's good deeds are more important than his life. In that case only doing good deeds and helping the needy is important in a person's life. That is why in Bhagavad Gita, Thirukkural, Thirumantiram, Naladiyar and Purananuru the writers have explained about the benefits a person attains in doing good deeds and shows a person's life will be destroyed if he has bad qualities. This article is about the moral ideas explained in Bhagavad Gita, the definition for virtue and it tells what will be the nature of person who does good deeds.

**Keywords** Stitapragna, Dharma, Adharma, Karma Yoga, Ego, Mamakara

## முன்னுரை

நற்செயல்கள் செய்வது மட்டும் அறமல்ல. பாவச்செயல்களை செய்யாதிருப்பதும் அறமே. அறம் என்றால் அறுத்துச்செய்யப்பட்டது என்றும் பொருள் அதாவது வரையறுத்துச் செய்யப்பட்டது. சான்றோர்களால் வரையறுத்துச் சொல்லப்பட்ட வாழ்வியல் விழுமியங்களே அறமாகும் (Suki Sivam, 2016). அறவியலை நேர்நிலையான விஞ்ஞானம் அல்லது அறவொழுக்க விஞ்ஞானமாகவும் (Positive Science of Morals) கொள்ளலாம். ஒழுக்கம் அல்லது அறமெனப்படுவது பலவகையான பொருள்களில் வழங்கலாம். அறவியலையே அறமெனக் கூறுகிறோம். நல்ல அல்லது நன்மையான செயல்களையும் அறமென்றுதான் குறிப்பிடுகிறோம். மேலும் இச்செயல்களுக்கு ஆதாரமாக விளங்கும் விதிகளையும் அறமென்றுதான் கூறுகிறோம். 'மாரல்' என்னும் இந்தச் சொல் இலத்தீன் மொழியிலுள்ள 'மோர்ஸ்' (mores) என்னும் சொல்லின் திரிபாகும். இச்சொல்லுக்கு வழக்கம் அல்லது மரபு (custom) எனப் பொருள் கொள்ளலாம். எனவே மனித நடத்தையைப்பற்றி மக்கள் வழக்கமாகக் கொள்ளும் முடிவையே அறமாகக் கொள்ளுவதில் பொருத்தம் இருக்கிறது. இதைத்தான் நேர்நிலையான அறவிஞ்ஞானத்தில் (Positive Science of Ethics) நாம் கொள்கிறோம். Ethics என்ற ஆங்கிலச் சொல் கிரேக்க மொழியிலிருந்து வந்தது என்று சொல்லலாம் (Gandhi, 1968).

## பகவத்கீதை ஒரு அறிமுகம்

நம் இதிகாசங்களான இராமாயணமும் மகாபாரதமும் பாரத தேசத்தின் இரு கண்களாக போற்றப்பட்டும் காக்கப்பட்டும் வருகின்றன. மகாபாரதமானது பகவத்கீதை, ஸ்ரீவிஷ்ணு சகஸ்ரநாமம்,

கஜேந்திர மோட்சம், விதுர நீதி, யக்ஷபிரஷ்ணம் போன்ற அறநெறிகளை விளக்கும் பல பகுதிகளை தன்னுள் கொண்டுள்ளது (Krishnamachaaryar, 2020). ஐந்தாவது வேதமாக கருதப்படும் மகாபாரதத்திற்குள் வேதாந்தமான உபநிடதம் கீதையாக இருப்பதால் இது வேதத்திற்கு சமமாகிறது. இதுவே பகவத்கீதையின் முக்கியத்துவம் ஆகும். இந்த கீதை இல்லாமல் மகாபாரதம் பூரணமாகாது. எனவே பகவத்கீதை எனும் நூலில் உள்ள அறங்களைப்பற்றி இக்கட்டுரையில் பார்ப்போம்.

அதர்மத்தை அழித்து தர்மமாகிய அறத்தை காக்கப் பிறந்ததே இந்நூல் ஆகும். இந்நூலானது போரினால் உண்டாகும் தீமையையும் போதிக்கிறது. அதே சமயம் இந்தப் போரினால் ஏற்படுகின்ற அழிவையும் கண்டு அஞ்சாமல் நீதியைக் காக்க போரிடப் பின்வாங்கக்கூடாது என்பதையும் போதிக்கிறது. சுயநலத்திற்காகப் போராடலும் தவறு அதேசமயம் சுயநலத்திற்காகப் போராடாமல் ஒதுங்குவதும் தவறு. எனவே இயல்புப்படி நம் வேலையை நாம் செய்யவேண்டும் என்பதையும் இறைவனின் கருவியாகச் செயல்பட்டு போர்புரிகிறேன் அதாவது வாழ்வியல் போராட்டங்களாயினும் இவ்வாறே எண்ணிச் செயல்பட்டால் அதன் பலன்களையும் இறைவனுக்கு அர்பணிக்கும் குணம் வரவேண்டும். ஏனெனில் மனிதன் வேலைக்குப் பின்வாங்குகிறான் ஆனால் அதன் பலனுக்கு அலைகிறான். இதற்கு மாற்றாகப் பலனை துறந்து வேலையைச் செய்ய (கடமை) பின்வாங்காதே என்ற தர்மத்தையும் கீதை போதிக்கிறது.

இன்றைய இளைஞர்களும் கீதையைக் கற்பார்களானால், புதுப்பலம், துணிவு, வாழ்க்கையில் உற்சாகம் எல்லாம் பெற்று வாழ்க்கையை வீணாக்காது நன்கு பயன் பெறுவர். நாட்டிற்கும் வீட்டிற்கும் கூடப் பயன்படுவர். யாருடனும், எங்கும், எந்தச் சூழ்நிலைக்கும் ஏற்ப தன்னை அமைத்துக் கொண்டு மகிழ்ச்சியுடன் வாழ கீதை நல்ல வழிகாட்டி. மகாத்மா காந்தியின் கையில் எப்போதுமிருந்து அவருக்கு வழிகாட்டியது கீதைதான். விவேகானந்தருக்கு விருப்பமான நூல் கீதைதான். மகாகவி பாரதியை உரை எழுத வைத்ததும் கீதை. எல்லா நூல்களையும் விட அதிக உரைகளை உடைய முழுமையான நூல் கீதைதான். இதில் அமைந்துள்ள 700 சுலோகங்களுக்கும் ஆதிசங்கரரும், ராமானுஜரும், மத்வாச்சார்யரும் விரிவுரை அருளிச் செய்துள்ளனர் (Krishnamachaaryar, 2020).

## பகவத்கீதை கூறும் அறவியல்

நாம் ஏற்கனவே அறம் என்பதற்கான விளக்கத்தில் நற்செயல்கள் புரிவது மட்டும் அறமல்ல. தீயசெயல்கள், தீய குணங்கள், தீய எண்ணங்களை அழிப்பதும் அறமே எனப் பார்த்தோம். அதன்படி பார்த்தால் மூன்று குரங்கு பொம்மைகளை நாம் பார்த்திருப்போம், அதாவது கண்களை மூடிக்கொண்டும், காதுகளை மூடிக்கொண்டும், வாயை மூடிக்கொண்டும் காணப்படும். இதன் பொருள் தீய எண்ணம், தீய சொல், தீயன கேட்டல், தீயன பார்த்தல் கூடாது என்பதற்காகவே. இது மட்டுமல்ல 'தான்' என்ற அகங்காரமாகியதை அழிப்பதும் மேலும் 'எனது' என்ற பொருட்பற்றாகிய மமகாரத்தை விடுவதும் கூட அறமே ஆகும்.

## அகங்காரத்தை அழிப்பதும் அறமே

"அஹங்காரம் பலம் தர்ப்பம் காமம் க்ரோதம் பரிக்கிரஹம்

விமுச்ய நிர்மமா ஸாந்தோ ப்ரஹ்ம பூயாய கல்பதே"

அகங்காரம், பலம், கர்வம், காமம், குரோதம், அபிமானம் இவைகளை விட்டொழித்து மமகாரமற்று சாந்த நிலையைப் பெற்றவன்தான் தானே ப்ரம்மமாவதற்கு தகுதியைப் பெறுகிறான் என்கிறது கீதை (Srinivasacharya, Keelathur, 1969). ஒருவனை இறைவன் காக்க நினைத்தாலும் அறியாமையினால் அவன் கொண்டுள்ள தன்முனைப்பு எண்ணம் அவனை அழிப்பதை ஸ்ரீபிள்ளை லோகாச்சார்யர்

"தன்னைத்தானே முடிக்கையாவது, அகங்காரத்தையும்

விஷயங்களையும் (ஐம்புல வேட்கையையும்) விரும்புகை"

என்கிறார். மேலும் தன்முனைப்பு எண்ணமானது நெருப்பின் சேர்க்கையைப் போன்று அழிக்கக்கூடியது என்கிறார் (Arangasamy, 2021).

"நைவ கிஞ்சித்கரோமீதி யுக்தோ மந்யேத தத்வவித்

பஸ்யந் ஸ்ருண்வந் ஸ்ப்ருஸஞ் ஜிக்ரந்நஸ்நந் கச்சந் ஸ்வபந் ஸ்வஸந்"

"ப்ரலபந் விஸ்ருஜந் க்ருஹ்ணந்நுந்மிஷந்நிமிஷநபி

இந்த்ரியாணீந்த்ரியார்த்தேஷீ வர்த்தந்த இதி தாரயந்"

யோக முறையில் ஆத்ம தத்துவத்தை அறிந்தவன் பார்ப்பது, கேட்பது, தொடுவது, நுகர்வது, உண்பது, நடப்பது, உறங்குவது, மூச்சுவிடுவது, பேசுவது, விடுவது, எடுப்பது, கண்களைத் திறப்பது, மூடுவது என்ற எந்தச் செயலைத் தான் செய்தபோதிலும் புலன்கள் அவைகளுக்குரிய விஷயங்களில் இருக்கின்றனவென்று முடிவுசெய்து 'நான் எதையும் செய்வதில்லை' என்று நினைப்பான் எல்லாம் அவன் செயல் என்றிருப்பான் (Srinivasacharya, Keelathur, 1969). இதுவே தன்முனைப்பற்ற அறநிலையாகும். இன்பம்/துன்பம் அல்லது லாபம்/நட்டம் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் நற்செயல்களைப் புரிந்துகொண்டே இரு. அது அறியாமையின் அடிவேறான அகங்காரத்தை அழித்துவிடும் என சாஸ்திரங்கள் கூறுகிறது (Swami Saradanandhar, 2013).

## மனமாசுகளை அகற்றலும் அறமே

"த்யாயதோ விஷயான்பும்ஸ ஸங்கஸ்தேஷு பஜாயதே

ஸங்காத் ஸஞ்ஜாயதே காம காமாத் க்ரோதோ பிஜாயதே

"க்ரோதாத்பவதி ஸம்மோஹ ஸம்மோஹாத் ஸ்ம்ருதி விப்ரம

ஸ்ம்ருதி திப்ரம்சாத் புத்திநாசோ புத்திநாசாத் ப்ரணச்யதி"

பொருட்களை நினைத்தால் பற்றுண்டாகிறது. பற்று ஆசையாகிறது. ஆசை சினமாக வடிவெடுக்கிறது. அந்தச் சினமானது மனக்குழப்பத்தை உண்டாக்குகிறது. குழப்பத்தால் நினைவின்மை ஏற்படுகிறது. நினைவு நாசத்தால் புத்தி நாசம் ஏற்படுகிறது. புத்தி நாசத்தால் ஆளே அழிந்துவிடுகிறான் (Srimad Swami Sidbhavanandhar, 2017). எனவேதான் ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு என்பார்கள். இவ்வாறாக நம்மிடம் உள்ள மனமாசுகளை அகற்ற அகற்ற நம்மிடம் உள்ள நற்குணங்கள் தானாகவே பரிணமிக்கத் தொடங்கிவிடும். ஒரு சிற்பி எவ்வாறு ஒரு கல்லில் உள்ள தேவையற்ற பாகங்களை செதுக்கியே ஒரு கண்கவர் சிலையை வடிக்கிறாரோ அதுபோல் தான் தீயவற்றை அறுப்பதும் அறமேயாகும். இதைத்தான் வள்ளுவரும் பின்வருமாறு வலியுறுத்துகிறார்.

"அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்

இழுக்கா இயன்றது அறம்"

இவ்வாறாக தீயனவற்றை விட்டபிறகு

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்

ஆகுல நீர பிற

அதாவது ஒருவன் மனதில் குற்றம் இல்லாதவனாக இருக்க வேண்டும். அதுவே அறம் என்கிறார். மனத்தூய்மை அல்லாத மற்றவை எல்லாம் ஆரவாரத்தன்மை உடையன என்கிறார் (Narayanavelupillai, 2012).

## ஆசையை அழிப்பதும் அறமே

நாம் மேலே பார்த்த கீதையின் வாசகத்தைத்தான் அதாவது ஆசைதான் அனைத்து மனமாசிற்கும் காரணம் என்பதையேதான் சுருக்கமாக ஈசாவாஸ்ய உபநிடத்தில் முதல் இரண்டு மந்திரங்களில் முனிவர் பாடி இருக்கிறார். அவை

"ஈசாவாஸ்யம் இதம் ஸர்வம் யத் கிஞ்ச ஜகத்யாம் ஜகத்

தேந த்யக்தேந புஞ்ஜீதா மாக்ருத கஸ்யஸ்வித் தனம்"

"குர்வன் ஏவ இஹ கர்மாணி ஜிஜிவிஷேச்சதம் ஸமா

ஏவம் த்வயி ந அந்யதா இத அஸ்தி ந கர்ம லிப்யதே நரே"

அதாவது, கருமத்தளையில் சிக்கிக்கொள்ளாமல் வாழ்நாளை முடிப்பதற்கு இதுவே வழி. வேறு கிடையாது. ஆகையால் உபநிடத்து வாக்கியமும் கீதை உபதேசமும் ஒன்றே, ஆசைகளை ஒழித்து, எல்லாம் ஈசன்மயம் என்று அறிந்து, அவனுக்கு அர்ப்பணமாகவே எல்லாத் தொழில்களையும் செய்து வாழ்நாட்களை முடிக்கவேண்டும். ஆசைகளை ஒழிப்பதே வேள்வி. அறிவே ஆசைகளை எரித்துவிடும் வேள்வித் தீ (Chakravarthi Rajagopalachari, Chakraborty, 2012). எனவேதான் நாம் ஆசையைத் துறந்துவிட்டு பிறர் நலனுக்காக வாழவேண்டும் என்பதை அறநூல் (அறநலம் அத்தியாயம்) பின்வருமாறு கூறுகிறது.

"நலநாடிப் பேசிடுமந் நற்செய்கை யோர்க்கே

யுளதெல்லா வூங்கும் உணர்"

நலமே எண்ணி, நலமே பேசி, நலமே செய்வோர் முத்தூய்மையுற்று, எல்லாச் சிறப்புகளுக்கும் உரியவராவார் (Suthanantha Bharatiyar, 1999).

"இருக்கக் குடிசில் இரந்துண்ணா தோர்செய்

அரைக்குக்கதர், தூயதுயில் ஆள்"

வசிப்பதற்கு ஒரு சிறு குடில், உழுதுண்ணத் தேவையளவு வயல், உடுத்திக்கொள்ளக் கதராடை, கவலையற்ற உறக்கம் இவை ஒருவனுடைய அறவாழ்விற்குப் போதுமானவை. பகலை உடலுழைப்பிலும், இரவைக் கடவுள் நினைப்பிலுங் கழித்தல் நலம் (Suthanantha Bharatiyar, 1999).

"பிறருய்யத் தான்வருந்தும் பேர்வாழ்வே வாழ்வாம்

அறமும் இதுவே யறி"

பிறர் நலத்தின் பொருட்டு பொறுமையுடன் இடர்தாங்கி அருட்பணி செய்வோர் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர். மனிதன் தனக்காக வாழ வரவில்லை. அப்பர், ஏசுநாதர், புத்தர், காந்தி முதலியோர் கடவுட் பணியும், காசினிப் பணியுஞ் செய்தனர். இவரே பெருவாழ்வு வாழ்ந்தவர் (Suthanantha Bharatiyar, 1999).

## ஸ்திதப்பிரக்ஞநிலை

லாப/நட்ட/இன்ப/துன்பங்களில் சமமான மனநிலையோடு இருத்தலும் நமக்கும் சமுதாயத்திற்கும் செய்கிற மிகப்பெரிய அறமாகும்.

"து கேஷ்வநுத்விக்நமநா சுகேஷு விகதஸ்ப்ருஹ

வீதராகபயக்ரோத ஸ்திததீர்முநிருச்யதே"

துன்பங்கள் நேர்கையில் எவனுடைய மனம் கலங்குவது இல்லையோ, சுகங்களை அடையும்போது அவற்றில் சிறிதுகூட ஆசை கொள்வதில்லையோ, எவனுக்கு விருப்பு, பயம், கோபம்

ஆகிய இவை முற்றும் அற்றுப்போயினவோ, அத்தகைய முனிவன் ஸ்திதப்ரக்ஞன் என்று கூறப்படுகிறான் (SriJayadayal Goyanthaka, 2019).

"ய ஸர்வத்ராநபிஸ்நேஹஸ்தத்தத்ப்ராப்ய சுபாசுபம்

நாபிநந்ததி ந த்வேஷ்டி தஸ்ய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்டிதா"

எவன் ஒருவன் அனைத்திலும் பாசம் வைக்காமல் அந்தந்த நல்ல அல்லது கெட்ட பொருளை அடைந்து மகிழ்வதில்லையோ, வெறுப்பதுமில்லையோ, அவனுடைய புத்தி ஸ்திரமானது (SriJayadayal Goyanthaka, 2019). இந்த ஸ்திதப்ரக்ஞ நிலையில் உள்ளவர்கள் சமூகத்தொண்டாற்றி வாழ்வார்களே தவிர சமூகத்திற்கு தீங்கு இழைக்கமாட்டார்கள்.

## புலனடக்கம்

"யதா ஸம்ஹரதே சாயம் கூர்மோங்காநீவ ஸர்வஸ

இந்த்ரியாணீந்த்ரியார்தேப்யஸ்தஸ்ய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்டிதா"

ஆமை எல்லாப் பக்கங்களிலிருந்தும் தனது உறுப்புக்களை உள்ளிழுத்துக் கொள்வதுபோல, எப்போது இந்த மனிதன் புலன்நுகர்ப் பொருட்களிலிருந்து புலன்களை முற்றிலும் இழுத்துக் கொள்கிறானோ, அப்போது அவனுடைய புத்தி ஸ்திரமானது என்று புரிந்துகொள்ள வேண்டும் (SriJayadayal Goyanthaka, 2019).

"விஷயா விநிவர்தந்தே நிராஹாரஸ்ய தேஹிந

ரஸவர்ஜம் ரஸோப்யஸ்ய பரம் த்ருஷ்ட்வா நிவர்ததே"

புலன்களின் மூலம் போகப் பொருட்களை ஏற்றுக் கொள்ளாத மனிதனுடைய புலன்நுகர் பொருட்கள் மட்டுமே விலகுகின்றன. ஆனால், அவற்றில் தங்கியுள்ள பற்று விலகுவதில்லை. இந்த ஸ்திதப்ரக்ஞனுக்கோ பரமாத்மாவைத் தரிசித்தப் பிறகு அப்பற்றும் விலகிவிடுகிறது (SriJayadayal Goyanthaka, 2019).

இதைத்தானும் ஔவையாரும் தனது ஞானபோதம் எனும் நூலில் கலைஞானம் எனும் அதிகாரத்தில் மூன்றாவது குறளில்

"அஞ்சாலும் மாயாஅறம் பொருள் இன்பமும்

துஞ்சாதவர் துறக்கும் ஆறு"

அதாவது ஐம்புலன்களால் உண்டாகும் இச்சைகளைவிட்டு அவற்றை அடக்கி ஆள்வதே அழிவில்லாத அறம், பொருள், இன்பம், வீடு பெற்று சாகாதிருப்பதற்கு சிறந்த வழி என்கிறார் (Murugadimai Durairaj, 2012). ஏனெனில் புலன்களை தன் வசப்படுத்தி ஜெயிப்பதுதான் நாம் அறவழி வாழ வழிவகுக்கும். இல்லையேல் புலன்கள் ஆசை வயப்பட்டு நல்லதை செய்யவிடாமல் தடுக்கும். எனவே புலனடக்கமும் அறமே ஆகும்.

## தியானமும் தவமும் தானமும் ஓர் அறமே

"ச்ரேயோ ஹி ஞானமப்யாஸாத் ஞானாத் த்யானம் விசிஷ்யதே

த்யானாத் கர்மபலத்யா கஸ்த்யாகாச் சாந்திரனந்தரம்"

அப்பியாசத்தைவிட ஞானம் சிறந்தது. ஞானத்திலும் தியானம் மேலானது. தியானத்தைக் காட்டிலும் கர்மபலத் தியாகம் உயர்ந்தது. தியாகத்தினின்று விரைவில் சாந்தி வருகிறது.

"மன ப்ரஸாத ஸௌம்யத்வம் மௌனமாத்மவிநிக்ரஹ

பாவஸம்சுத்திரித்யேதத்தபோ மானஸமுச்யதே"

சோர்வடையாது, குழப்பமடையாது, குதூகலத்தில் அமைதியுற்றிருத்தல் மனப்பிரசாதமாம். சீரிய எண்ணங்களே உள்ளத்தில் உதிக்க இடந்தருதலும், கெட்ட எண்ணங்களை வரவொட்டாது தடுத்தலும், ஈசுவர சிந்தனை தைலதாரை போன்று ஊற்றெடுப்பதும் மௌனம் எனப்படும். சொல்லிலும் செயலிலும் விடச் சிந்தனையில் தன்னடக்கம் பயிலுதல் சாலச்சிறந்தது. சிந்தனையில் அடக்கம் பழகியவனுக்கு வாயடக்கமும் மெய்யடக்கமும் தாமே வந்து அமைகின்றன. மனதில் உண்டாகிற உணர்ச்சி பாவமெனப்படுகிறது. வியவகார வேளையிலும் இந்த உணர்ச்சி தூயதாயிருத்தல் வேண்டும்.

நாம் பொருட்களைத் தானமாக கொடுப்பதும் அறமே. ஆனாலும் நாம் செய்யும் செயல்களின் பாவ, புண்ணிய பலன்களை இறைவனிடம் கர்மபலத் தியாகமாக கொடுப்பது இன்னும் சிறந்ததாகும். இதையே ஔவையார் தனது முருகனுக்கான பதிலில் பின்வருமாறு கூறுகிறார்.

"ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது

ஞானமும் கல்வியும் நயந்த காலையும்

தானமும் தவமும் தாம் செயல் அரிது

தானமும் தவமும் தாம்செய்வார் ஆயின்

வானவர் நாடு வழி திறந்திடுமே!" (Poovai Amuthan, 1998)

## அறவோரிடம் இருக்கும் தெய்வ சம்பத்துக்கள்

பதினாறாவது அத்தியாயத்தின் முதல் மூன்று ஸ்லோகங்களில் அஞ்சாமை, உள்ளத்தூய்மை, ஞான யோகத்தில் உறுதி, ஈகை, தன்னடக்கம், வேள்வி, வேதங் கற்றல், தவம், நேர்மை, கொல்லாமை, வாய்மை, சினவாமை, துறவி, ஆறுதல், வண்மை, ஜீவதயை, அவாவின்மை, மென்மை, நாணுடைமை, சலியாமை, ஒளி, பொறை, உறுதி, சுத்தம், துரோகமின்மை - இவை தெய்வசம்பத்தை எய்தியவனிடம் காணப்படுகின்றன என்கிறார் கிருஷ்ணர் (Mahakavi Subramaniya Bharatiyar, 2015).

## சமநோக்கு

சமநோக்கு என்பதும் மிகப்பெரிய அறமாகும். ஏனெனில் அப்போதுதான் சகலஜீவராசிகளிடமும் உயர்வு தாழ்வின்றி அனைவரையும் ஒன்றாகவும், தன்னிலும் பிறரிடமும் இறைவனைக் காணும் பாங்கும் ஏற்படும்.

"அத்வேஷ்டா ஸர்வபூதானாம் மைத்ர கருண ஏவ ச

நிர்மமோ நிரஹங்கார ஸமது கசுக க்ஷமி"

"ஸந்துஷ்ட ஸததம் யோகீ யதாத்மா த்ருடநிஸ்சய

மய்யர்பிதமனோபுத்திர்யோ மத்பக்த ஸ மே ப்ரிய"

உயிர் அனைத்திடத்தும் வெறுப்பின்றி, நட்பும் கருணையும் உடையவனாய், மமகாரம் அகங்காரமற்று இன்ப துன்பங்களைச் சமமாய் கருதி, பொறுமைபடைத்து, எப்பொழுதும் சந்தோஷமாயிருப்பவன், யோகியாய், தன்னடக்கமுடையவனாய், திடநிச்சயமுள்ளவனாய், என்னிடத்து மனம் புத்தியை சமர்ப்பித்தவனாய் யார் என் பக்தன் ஆகிறானோ அவன் எனக்குப் பிரியமானவன் என்கிறார் (Srimad Swami Sidbhavanandhar, 2017).

"ஸர்வபூதஸ்தமாத்மானம் ஸர்வபூதானி சாத்மனி

ஈக்ஷதே யோகயுக்தாத்மா ஸர்வத்ர ஸமதர்சன"

யோகத்தில் உறுதி பெற்று எங்கும் சமதிருஷ்டியுடையவன் தன்னை எல்லா உயிர்களிடத்தும், எல்லா உயிர்களைத் தன்னிடத்தும் இருப்பதாகக் காண்கிறான் (Srimad Swami Sidbhavanandhar, 2017).

மேலும் கீதையில் ஐந்தாம் அத்தியாயத்தில் ஏழாவது ஸ்லோகத்தில் பிரம்மா முதல் புல்-பூண்டு ஈறாக எல்லா உயிர்களிலும் ஆத்மாவாக உள்ள பகவானே தன்னிடமும் ஆத்மாவாகி அந்தர்யாமியாக விளங்குகிறார் என்ற எண்ணம் இல்லாதவனுமே ஸர்வபூதாத்மபூதாத்மா எனப்படுகிறான். எல்லா உயிர்களிலும் கடவுளைக் காணும் போது உயர்வு, தாழ்வின்றி அனைத்துயிர் மீதும் ஜீவகாருண்யம் பிறக்கும். அப்போதுதான் பிற உயிரை அடித்துத்திண்பதோ, பிற உயிரை துன்புறுத்துவதோ, மேலும் எண்ணம், சொல், செயலால் கூட பிறருக்கு தீங்கு விளைவிக்காது வாழ்வோம். எல்லா உயிர்களையும் சமமாக மதித்து பாவித்து இறைவனைக் காணுதலைத்தான் வள்ளல்பெருமான் ஆன்மநேய ஒருமைப்பாடு வேண்டும் என்றார்.

## இறைத்தொண்டும் அறமே

இறைவனுக்குத் தொண்டு செய்யும் அறத்தை சைவ சித்தாந்தம் சரியை, கிரியை என்கிறது. ஒருவேளை, ஒருவரால் பணத்தாலோ, பொருளாலோ, உடலாலோ தொண்டு செய்ய இயலாவிட்டால் கூட அவர்களும் ஆண்டவனுக்கு ஏதாவது அர்ப்பணிக்க நினைத்தால் அது ஒரு சுமையாக பக்தனை வருத்தக்கூடாது என்பதற்காக இறைவன் தனக்கு ஓர் பூ, இலை, பழம், நீர் என எதை வேண்டுமானாலும் பக்தியோடும் உள்ளன்போடும் கொடுத்தால் ஏற்பேன் என்று ஒன்பதாவது அத்தியாயத்தில் இருபத்து ஆறாவது ஸ்லோகதில் பகவான் கூறுகிறார். (Bharatiyar, 2020) மேலும் இவற்றைக்கூட கொடுக்க இயலாதவர்கள் இருந்த இடத்திலிருந்தே பகவானை நினைத்து தன்னையே (ஆத்மாவையே) ஆத்மநிவேதனமாக கொடுத்தாலும் இதைவிட உலகிற் சிறந்தது வேறெதுவுமில்லை.

இவ்வாறு தன்னையே முழுமையாக அர்ப்பணிப்பதே பூரணசரணாகதி ஆகும். இதனால் இறைவன் நமது அனைத்து பாவங்களிலிருந்தும் நம்மை விடுவித்து காப்பதாக கீதையில் தானே உறுதியளித்துள்ளார். ஆனால் இது அறவழி நடப்போருக்கு மட்டுமே பொருந்தும். மேலும் மேலும் பாவங்களைச் சேர்ப்போருக்கு பொருந்தாது.

## அறம் செய்தலினும் சிறப்பு

அறம் செய்தலினும் சிறப்பு என்னவென்றால் நாம் செய்யும் அறம்கூட புண்ணியப் பலன்களைத் தந்து நம்மை மறுபிறவிக்கு இட்டுச்செல்லும். அதேசமயம் அந்த அறச்செயலின் பலனை முழுமையாக பகவானிடம் அர்ப்பணம் செய்துவிட்டால் பாவபுண்ணிய சுழற்சியிலிருந்து விடுவித்து பகவான் நம்மைக் காப்பார். கீதையின் நான்காம் அத்தியாயத்தின் பதினேழாவது ஸ்லோகத்தில் பகவானே கர்மம் மர்மமானது என்பதை புரியவைக்கிறார். அதாவது ஓர் உயிரைக் காப்பது அறம். அதேசமயம் ஓர் உயிரின் பசியைப் போக்குதலும் ஓர் அறம். அவ்வாறு இருக்கையில் ஓர் விலங்கு மற்றொரு விலங்கை அடித்துக்கொன்று தின்றால் நாம் எது செய்தாலும் அது பாவமாகவோ, புண்ணியமாகவோ கொள்ளப்படும். எனவே பலன் எதுவாயினும் அதை இறைவனிடம் அர்ப்பணித்துவிட்டால் பகவான் நமக்கு எவ்விதத் தீங்கும் இன்றி முக்திப்பேற்றை நல்குவார். எனவேதான் கீதையில் கர்மயோகம் என்பதும் கர்மஸந்யாஸயோகம் என்பதும் மிக முக்கியமாகப் பேசப்படுகிறது. இதைப் புரிந்துகொள்வதற்கு ஓர் ஞானம் வேண்டும். மேலும் இறைவனையும், இயற்கையையும், பிரபஞ்ச இரகசியத்தையும் புரியவைத்து நம்மை பற்றற்றவர்களாக்கி இறைவனிடம் முழுமையாகக் கொண்டுசேர்ப்பதே ஞானயோகம் எனப்படும். தூணிலும் இருப்பான் துரும்பிலும் இருப்பான் அனைத்து உயிர்களிலும் நிறைந்திருப்பது இறைவனே என்பதைப் புரிந்து முழு நம்பிக்கையோடு சரணாகதி அடைவது பக்தியோகம் ஆகும். யோகமார்க்கம் மூலமாகவும் பகவானை அடையலாம். எந்த யோகத்தை கடைபிடித்தாலும் அதில் அறவழியில் செல்வோரால் மட்டுமே பகவானை அடைய முடியும்.

"அறவோரைக் காக்க ஆண்டவரே வருகிறார்

யதா யதா ஹி தர்மஸ்ய க்லாநிர் பவதி பாரத

அப்யுத்தாந மதர்மஸ்ய ததாத்மாநம் ஸ்ருஜாம்யஹம்

பரித்ராணாய ஸாதூநாம் விநாஸாய ச துஷ்க்ருதாம்

தர்ம ஸம்ஸ்தாபநார்தாய ஸம்பவாமி யுகே யுகே"

எவ்வெப்பொழுது தர்மத்திற்குத் தாழ்வு ஏற்பட்டு அதர்மம் தலை தூக்குகிறதோ அவ்வப்பொழுதெல்லாம் என்னை நான் சிருஷ்டித்துக் கொள்கிறேன். சாதுக்களைக் காப்பதற்கும், துஷ்டர்களை அழிப்பதற்கும் தர்மத்தை நிலைநிறுத்துவதற்கும் நான் ஒவ்வொரு யுகத்திலும் அவதாரம் செய்கிறேன் என்கிறார் (Srinivasacharya, Keelathur, 1969).

எனவே நாமும் அறம் பிறழாது வாழ்ந்து ஆண்டவரின் தாள் பணிந்து இம்மையிலும், மறுமையிலும் உய்வுபெற்று முக்திபேற்றையும் ஆண்டவனுக்கு இனியவன் என்ற அருட்பேற்றையும் அடைவோமாக. இப்பிரபஞ்சத்தின் ஒட்டுமொத்த உயிர்களையும், இயற்கையையும் வழிநடத்தி இயக்கக்கூடிய சக்தி அறத்திற்கு மட்டுமே உண்டு. நாம் வணங்கும் தெய்வம் எதுவாக இருப்பினும் அதைத் துதிப்பதற்கான ஒற்றை மந்திரச்சொல் அறம் என்பதாகும். எனவேதான் அறமே மந்திரமாகக் கொள்ளல் வேண்டும். தெய்வத்தை நிந்திப்பவர்களுக்குகூட அவர்களைக் காக்க இந்த மந்திரம் ஒன்றே போதுமானது. ஏனெனில் அறவழி உடையோர்க்கு ஆண்டவனே வலியவந்து அன்பு செய்வார். எனினும் சில நேரங்களில் நல்லவர்கள் துன்பப்படுவதுண்டு. காரணம் என்னவென்றால் அறத்துக்கே அன்பு சார்பென்ப அஃதன்றி மறத்துக்கும் அஃதே துணை என்பார் தெய்வப்புலவர் வள்ளுவர். அதாவது நல்லோர்களைப் பெரும் தீவினையில் இருந்து காக்கும் பொருட்டு அவர்களைத் தடுத்தாட்கொள்ளும் விதமாக சிறு துன்பங்களைத் தந்து பெரும் ஆபத்தை நீக்குவார். எனவேதான் எச்சூழலிலும் அறவழி தவறாது நடத்தல் வேண்டும்.

## முடிவுரை

அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு வகைப் புருஷார்த்தம் என வடமொழியில் கூறப்படுவதாகிய தர்ம, அர்த்த, காம, மோட்சம் என்பவற்றில் முதலிடம் வகிப்பதாகிய அறத்தைக் கைகொள்வதே இன்றைய காலச்சூழ்நிலையில் மிக முக்கிய கொள்கையாக நாம் கடைபிடிக்கவேண்டும். ஏனெனில் இன்று எங்கும், எதிலும், எவ்வகையிலும் அறம் என்பதே இல்லாத சூழ்நிலை இருப்பதால் அறன் வலியுறுத்தலே இன்றைய காலகட்டத்தில் மிக முக்கிய ஒன்றாக உள்ளது. எனவேதான் பகவத்கீதையில் கூறப்பட்டுள்ள அறநெறிகள் பற்றி இக்கட்டுரையில் விளக்கிக்கூறப்பட்டுள்ளது. எனவே அறத்தை சிரம் தாழ்த்தி வணங்கி கடைபிடிப்போமாக.

## References

Amuthan, Poovai (1998) Tamil Puzhavar Auvaiyar, Prema Publications, Chennai, India.

Arangasamy, J. (2021) Srivasana Pushanathil Prabannan, Tamil University, Thanjavur, India.

Bharathiar, Suthanantha, (1999) Aranool, World Institute of Tamil Research, CIT Campus, Taramani, Chennai, India.

Bharatiyar, (2015) Bhagavad Gitai Vilakkam, Srisenpaha Publishing House, Chennai, India.

Bharatiyar, (2020) Yogasastram Ennum Bhagavad Gitai, Narmada Publishing House, Chennai, India.

Durairaj, Murugadimai, (2012) Auvai Aruliya Jnanabotham, Karpagam Buddhakalayam, Chennai, India.

Krishnamachaaryar, A., (2020) Transcendental Training in Bhagavad Gita, Srivaishnavasree, Srirangam, Trichy, India.

 DOI: 10.34256/irjt224s1915

Narayanavelupillai, M. (2012) Thirukkural, (First Edition), Narmada Publishing House, Chennai, India.

Rajagopalachari, Chakraborty, (2012) Aranoolgal, Pudumai Publishing House Ltd., Karaikudi, India.

SriJayadayal Goyanthaka, (2019) Srimath Bhagavad Gita Thatvavivechani, Geeta Press, Kolkata, India.

Srimad Swami Sidbhavanandhar, (2017) Srimad Bhagavad Gitai, Sri Ramakrishna Thabovanam, Thiruparaithurai, India.

Srinivasacharya, Keelathur, (1969) Srimad Bhagavad Gitai, The Little Flower Company, T. Nagar, Chennai, India.

SukiSivam, (2016) Ethu Dharmam, Karpagam Buddhakalayam, Chennai, India.

Swami Saradanandhar, (2013) Gitaiyin Vazhiyil, Sri Ramakrishna Math, Mylapore, Chennai, India.

**Funding**: No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License